Judicial Form No.53

See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 38/2015 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW8 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | ரவி |
| Father's Name | – | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 18th September 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 21.03.2014 ம் ஆண்டு நெகமம் காவல்நிலைய ஆய்வாளராக பணியில் இருந்தபோது, சிறப்பு உதவி ஆய்வாளர் செபஸ்டின் என்பவர் நிலைய அலுவலில் இருந்தபோது, ராஜன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.70/2014, இதச பிரிவுகள் 279, 337, 304(A)ன் முதல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

பின்னர் வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணை எடுத்துக்கொண்டு, 22.03.2014 ம் தேதி காலை 06.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஈஸ்வரன் மற்றும் குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் முறையே **அ.சா.ஆ.4** மற்றும் **அ.சா.ஆ.5** ஆகும்.

பின்னர் மேற்படி சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காலை 07.00 மணிக்கு விபத்தில் இறந்துபோன சதீஷ்குமாரின் என்பவரின் பிரேத்தினை அரசு மருத்துவமனை பொள்ளாச்சி சவக்கிடங்கு முன்பு வைத்து சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும்.

பின்னர் பிரேதத்தினை சடலக்கூறாய்விற்காக சிறப்பு உதவி ஆய்வாளர் செபாஸ்டின் அவர்கள் மூலமாக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 17 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் விபத்தில் இறந்துபோன சதீஷ்குமார் என்பவரின் பிரேத்தினை பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் சிவக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலமும் அவர் அளித்த பிரேத பரிசோதனை அறிக்கையும் பெற்றேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.7 ஆகும். பின்னர் விபத்தில் சம்பந்தப்பட்ட வசந்த் மற்றும் சதீஷ் ஆகியோருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திருமங்கை அவர்களை விசாரித்து வாக்குமூலமும் அவர் அளித்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்களையும் பெற்றேன். அவைகள் முறையே அ.சா.ஆ.8 மற்றும் **அ.சா.ஆ.9** ஆகும்.

பின்னர் விபத்தில் காயம்பட்ட கிருஷ்ணன் என்பவர் கோவை பிளஸ்ஜி மருத்துவமனையில் சிகிச்யைளித்த மருத்துவர் ரகுபதி அவர்களை விசாரித்து வாக்குமூலமும் அவர் அளித்த காயச்சான்றிதழையும் பெற்றேன். அந்த காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.10** ஆகும்.

பின்னர் வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி மற்றும் பாதிக்கப்பட்ட நபர்கள் ஓட்டி வந்த வாகனங்களான TN 41 AH 7659 என்ற ஈச்சர் வாகனத்தையும், TN 37 AM 6339 என்ற எதிரி ஓட்டி வந்த சரக்கு ஆட்டோவையும் மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்து மோட்டார் வாகன ஆய்வாளர் சண்முகவடிவேல் அவர்களை விசாரித்து வாக்குமூலமும் அவர் அளித்த ஆய்வறிக்கைகளையும் பெற்றேன். மேற்படி ஆய்வறிக்கைகள் முறையே **அ.சா.ஆ.11** மற்றும் **அ.சா.ஆ.12** ஆகும்.

பின்னர் வழக்கில் காயம்பட்ட ராஜன் என்பவருக்கு சிகிச்சையளித்த அருண் மருத்துவமனை மருத்துவர் சிவக்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலமும் அவர் அளித்த காயச்சான்றிதழையும் பெற்றேன். அந்த காயச்சான்றிதழ் **அ.சா.ஆ.13** ஆகும். பின்னர் வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில் காவல்நிலையத்தில் சரணடைந்த 24.07.2014 ம் தேதி மதியம் 12.00 மணியளவில் கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன்.

பின்னர் வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் சட்டப்பிரிவினை இதச பிரிவுகள் 279, 337, 304(A)லிருந்து 279, 337 (2 Counts), 338, 304(A) ஆக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். அந்த அறிக்கை **அ.சா.ஆ.14** ஆகும். பின்னர் இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிக்கெதிராக மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரினை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், பார்வை மகசர் மாதிரி வரைபடம் சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லையென்றாலும், காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எந்த சம்மந்திமல்லை என்றால் சரியல்ல நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. சம்பந்தப்பட்ட வாகனத்தை எதிரி ஓட்டவில்லையென்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No. II,
Pollachi.